**கவனிக்க.-** (i) *2021.10.15 ஆந் திகதிய 2250 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *மற்றும் பகுதி* IV *(அ) பிரசுரிக்கப்படவில்லை.*

(ii) *இந்த வர்த்தமானியில் பகுதி* VI *இல் 2021 ஆம் ஆண்டுக்கான கேகாலை மாவட்டத்திற்குரிய நீதாசன வலயங்களின் யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றது.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2251 - 2021 ඔක්තෝබර් මස 22 වැනි සිකුරාදා - 2021.10.22

*2251ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி II - சட்ட சம்பந்தமானது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| சட்டமூலங்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 314 |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**கவனிக்க.-** (i) *குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவை ( திருத்தம்) சட்டமூலம் 2021,ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

(ii) *ஒதுக்கீடு ( திருத்தம்) சட்டமூலம் 2021, ஒற்றோபர் மாதம் 01ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

(iii) *சஹன சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2021, ஒற்றோபர் மாதம் 01 திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2021, நவெம்பர் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, ஒற்றோபர் மாதம் 29ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

### 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


313 - B 082279 - 353 (2021/10)

# நானாவித அறிவித்தல்கள்

## *1944 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க இலங்கை பப்டிஸ்ட் சபைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட 1991 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க ஸ்ரீ லங்கா பப்டிஸ்ட் சங்கம் ( கூட்டிணைத்தல் ) ( திருத்த) சட்டத்தை திருத்துவதற்கான சட்டவரைவு ( சட்டமூலம்)*

*ஹர்ஷ டீ சில்வா ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியல்/கட்டளை 53 இன் கீழ் , 1944 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க பப்டிஸ்ட் சபைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட "1991 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க ஸ்ரீ லங்கா பப்டிஸ்ட் சங்கம் ( கூட்டிணைத்தல்) ( திருத்த) சட்டத்தை திருத்துவதற்கான சட்டம்" என அழைக்கப்படும் சட்டவரைவு ( சட்டமூலம்) ஒன்றை நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்த இத்தால் அறிவித்தல் வழங்குகின்றேன்.*

*இச் சட்டவரைவின் ( சட்டமூலத்தின் ) நோக்கம் , கூட்டிணைக்கப்பட்ட ஸ்ரீ லங்கா பப்டிஸ்ட் சங்கம் என்பதற்குப் பதிலாக "ஸ்ரீ லங்கா பப்டிஸ்ட் சபை" என்னும் திருத்தத்தை செய்வதாகும்.*

*10- 354*

---

## குடியியல் நியாயாதிக்கத்தைக் கொண்ட மேல் மாகாண மேல் நீதிமன்றில் ( கொழும்பில் அமையப்பெற்றது)

இல. 17, சமகி மாவத்தை, பொருப்பன வீதி, இரத்மலானையில் அமைந்துள்ள EZY DISTRIBUTION (PRIVATE) LIMITED விடயத்திலும்,

*மற்றும்*

ஒடுக்குவதற்கான
விண்ணப்ப இலக்கம் :
73/2021/ CO

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பகுதியின் கீழ் நீதிமன்றினால் ஒடுக்குவதற்கான ஓர் விண்ணப்பம்,*

*டீ.எப். சீ.சீ. வங்கி பீஎல்சீ,*
*இல. 73/5, காலி வீதி,*
*கொழும்பு -03.*

*மனுதாரர்*

*மேற்கூறப்பட்ட கம்பனியை மேல் மாகாண மேல் நீதிமன்றத்தினால் ( கொழும்பில் அமையப்பெற்றது) ஒடுக்குவதற்கான மனு 2021 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 16 ஆந் திகதி.*

*டீ.எப். சீ.சீ. வங்கி பீஎல்சீ,*
*இல. 73/5, காலி வீதி,*
*கொழும்பு -03.*

*இனால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென்றும்,*

*குறித்த மனுவானது 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 13 ஆந் திகதி நீதிமன்றத்துக்கு முன் விசாரிக்க உத்தரவிடப் பட்டுள்ளதென்றும், மேற்குறித்த மனு சம்பந்தமாக மேற்குறித்த கம்பனிக்கு கடன் கொடுத்தவர் அல்லது பங்களிப்புச் செய்தவர் எவராவது குறித்த மனு தொடர்பில் கட்டளை பிறப்பிப்பதை ஆதரவு அல்லது எதிர்க்க விரும்பின் விசாரணையின்பொது நேரடியாகவோ அல்லது அவரது சட்டத்தரணி மூலமாகவோ அல்லது அக்காரணத்திற்காக பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி*

மூலமாகவோ தோற்றலாம் எனவும் மேற்படி கம்பனிக்கு எந்தவொரு கடன் கொடுத்தவர் அல்லது பங்களிப்புச் செய்தவருக்குத் தேவைப்படின் மனுவின் ஒரு பிரதி கீழ் கையொப்பமிட்டவரினால் அதற்குரிய கட்டணத்தின்படி, பணக்கொடுப்பனவின் பிரகாரம் வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்படுகின்றது.

திரு. தேஜக்க பெரேரா,
மனுதாரரின் சட்டத்தரணி,
இல. 73, W.A.D.இராமநாயக்க மாவத்தை,
கொழும்பு 2.

**குறிப்பு**:-மேற்குறித்த மனுவின் விசாரணையின் போது நேரில் சமுகமளிக்க எவராவது நோக்கம் கொள்வராயின் அவரின் அல்லது அவர்களின் நோக்கம் பற்றிய அறிவித்தலை எழுத்தில் தெரிவித்து மேற்குறித்த சட்டத்தரணியான திரு. தேஜக்க பெரேரா அவர்களுக்கு நேரடியாக அல்லது பதிவுத் தபால் மூலம் சேர்ப்பிக்க வேண்டும். குறித்த அறிவித்தல் நபர்களின் பெயர்கள் மற்றும் விலாசங்கள் அல்லது கம்பனியாக இருப்பின் கம்பனியின் பெயர் மற்றும் முகவரி அல்லது அவர்களுக்கு/அவருக்கு பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி இருப்பின் பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணியின் பெயர் என்பவற்றை குறித்து மேற்குறித்தவருக்கு நேரடியாக அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படுவதாயின் போதியகால அவகாசத்துடன் 2021ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 11 ஆந் திகதி பி.ப. 1.00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

தேஜக்க பெரேரா,
மனுதாரரின் சட்டத்தரணி.

10- 333

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.